# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 809/2023

| | |
|---|---|
| | Prosecution PW 3 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சோளியம்மாள் |
| Husband's Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 03.09.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புலியூர், செட்டிபாளையத்தில் குடியிருந்து வயோதிகம் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன், அ.சா.1 எனது மகள் ஆவார்கள். அ.சா.1 க்கும், ஆஜர் எதிரிக்கும் இடையே சொத்து சம்மந்தமான பிரச்சனை இருந்து வந்தது. எனது மகள் சிவில் நீதிமன்றம் மூலம் வழக்கு தொடர்ந்து, அதில் தீர்ப்பு பெற்றுள்ளார். அந்த சொத்தில் உள்ள பாத்ரூமை 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 05.00 மணியளவில் ஆஜர் எதிரி உடைத்துகொண்டிருந்தபோது, சத்தம் கேட்டு அ.சா.2 எனது மருமகன் சென்று பார்த்தார். அ.சா.2 ஐ ஆஜர் எதிரி கடப்பாறையால் தாக்கிவிடுவதாக மிரட்டினார். அ.சா.1 கேட்டபோது அவரை அசிங்கமாக திட்டி, கொலை மிரட்டல் விடுத்தார். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். இது சம்மந்தமாக அ.சா.1 கொடுத்த புகாரின்பேரில் போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 809/2023

| | |
|---|---|
| | Prosecution PW 4 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சக்திவேல் |
| Father's Name | : | சாமியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 03.09.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பசுபதிபாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் மற்றொரு நபர் கையொப்பம் செய்தார். 3 வருடங்கள் ஆகிவிட்டதால் அவரின் பெயர் தற்போது ஞாபகமில்லை. 11.05.2022 ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் சொந்த வேலையாக புலியூர் சென்றிருந்தபோது பசுபதிபாளையம் போலிசார் சாந்தி வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். சம்பவ இடத்தில் கிடந்த கடப்பாறை மற்றும் உடைந்துபோன பீங்கான் துண்டுகளை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். சம்பவ இடத்தில் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் முறையே அ.சா.ஆ. 2,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**